
# மில்க்வைற் செய்தி
# Milk White News

தபாற்பெட்டி இல. 77 யாழ்ப்பாணம் தொலைபேசி: 7233

கௌரவ ஆசிரியர்: திரு. க. சி. குலரத்தினம் ★ பங்குனி 1982 ★ இதழ் - 75


## 75 பவளம் பழுத்த இதழ் 75

திருவருளாலும் குருவருளாலும் நாமாரம்பித்த மில்க்வைற் செய்தி, மாதந் தோறும் மலர்ந்து எழுபத்தைந்தாம் மாதத்தில் இன்று பவளவிதழாக உங்கள் கையில் தவழ்ந்து விரிகின்றது. நாம் திருப்பித் திருப்பி நின்றும் இருந்தும் கிடந்தும் சொல்வது எங்கள் பண்பாடு உலர்ந்து போகாது நிலைத்து வாழவேண்டும் என்பதையையே.



திருநெல்வேலி சைவச்சிறுவர் இல்லத்திலுள்ள பிள்ளைகளுக்கு சுதந்திர தினத்தன்று காகிதப்பூ செய்தல், பன்னவேலை, மாலைதொடுத்தல் முதலியவற்றைப் பழக்கும் வகுப்பை திரு. க கனகராசா ஜே. பி. ஆரம்பித்து வைக்கின்றார். அருகில் பனைக்கைத் தொழில் வல்லுநர் திரு. சு. பரநிருபசிங்கம் பி. எஸ். சி. காணப்படுகின்றார்.

எங்கள் நாகரிகம் எவ்வாறு எம் முந்தையோரிடமிருந்து எமக்கு வரப்பிரசாதமாக வந்தமைந்ததோ, அவ்வாறே அது எம் பிற்சந்ததியாருக்கும் வாய்ப்பாகக் கிடைக்கக்கூடியதாக அதை நாம் பேணிப் பாதுகாத்து விட்டுச் செல்லவேண்டும்.

நாகரிகம் என்பது சால்புபோலப் பல பண்புகள் ஒன்று சேர்ந்து உருவானது. வண்டிற் சில்லின் அமைப்

(தொடர்ச்சி 11ஆம் பக்கம்)

★ உலகத்துக்காக உழைப்பவனை உலகம் காக்கும் ★

உ
சிவமயம்



# கடவுள் வணக்கம்

## திருநாவுக்கரசு நாயனர் தேவாரம்

மனத்தொகைத் திருக்குறுந்தொகை

*(மனத்தின் எண்ணங்களைத் தெரிவிப்பது)*

திருச்சிற்றம்பலம்

பொன்னுள் ளத்திரள் புன்சடை யின்புறம்
மின்னுள் ளத்திரள் வெண்பிறை யாயிறை
நின்னுள் ளத்தருள் கொண்டிருள் நீங்குதல்
என்னுள் ளத்துள தெந்தை பிரானிரே.

திருச்சிற்றம்பலம்

எந்தை பெருமானே! பொன்னிற முள்ளதாய்த் திரண்ட மெல்லிய அழகுடைய சடையின்மேலே ஒளியுள்ள பிறையை அணிந்தருளியவரே, சிறுபொழுது தேவரீரின் திருவுள்ளத்தில் கருணைபூத்து, அடியேன் உள்ளத்திலுள்ள அஞ்ஞானத்தை நீக்குதற்காகத் திருவருள் செய்வீராக.

முக்கண்ணனே, முனிவர்கள் தியானிக்கும் திருவடியுள்ளவரே, புலித்தோலாடையினரே தேவரீர் திருவருளன்றி வேறொன்றிலேன். தண்ணியனே, சடையினனே, தேவரீரே அடியேனுக்குப் புகல். வேதம் பாடுபவரே, முனிவர்களாலும் அறியமுடியாதவரே, தேவரீர் பாம்பும் பிறையும் தரித்தவர் என்பதல்லால் அடியேனல் வேறொன்றும் சொல்ல முடியவில்லையே. கொன்றையணிந்தவரே, புலித்தோலும் பாம்பும் அணிந்தவரே, தீயேந்தியவரே, தேவரீர் திருவடிகளல்லாமல் மற்றொன்றும் அறியேனே. அப்பனே, உமாதேவியாரோடு விடையேறி வருபவனே, தேவரீரை அறியாத மயக்கம் தீர்த்தருளவேண்டும். சிவனே என்பவர்களின் தீவினைகளை நீக்கியருள்பவனே, தேவரீரின் திருவடிகளே அடியேனுடைய பற்று. அவற்றைப் புகழுமாறு அறியேனே. திருமாலாலும் அறியமுடியாதவரே தேவரீரின் திருவருளே அடியேனுடைய பற்றுக்கோடாகும் எந்தை எம்பீரான் என்று ஏத்திப் பரவுவார்கள் இறைவன் திருவடியின்பம் பெறுவதில் ஐயமில்லை.




## மக்கட் பேறு

(நல்லபிள்ளைகளைப் பெறுதலின் பயன்)

"தம்மின் தம்மக்கள் அறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க் கெல்லாம் இனிது".

தம்மிலும் பார்க்கத் தங்களுடைய பிள்ளைகள் கல்வியறிவுடையராய் இருப்பது, இப்பெரிய உலகத்திலுள்ளவர்களுக்கெல்லாம் மகிழ்ச்சியைத் தருவதாகும்.

## THE BLESSING OF HAVING CHILDREN

Far more than to the parents does the enlightenment of their children give delight to all men in the wide world.

## 1982 மார்ச் மாத நிகழ்ச்சிகள்

| | | | |
|---|---|---|---|
| 1 | திங்கள் | — | கார்த்திகை விரதம் |
| 3 | புதன் | — | கச்சியப்பசிவாசாரியார்குருபூசை |
| 6 | சனி | — | ஏகாதசி விரதம் |
| 7 | ஞாயிறு | — | பிரதோஷ விரதம். ஆயிலியம் |
| 8 | திங்கள் | — | மாசி மகம் நடேசர் அபிடேகம் |
| 9 | செவ்வாய் | — | பூரணை விரதம் |
| 10 | புதன் | — | மாசி உத்தரம் திருவள்ளுவர் குருபூசை |
| 19 | வெள்ளி | — | வண்ணை வைத்தீஸ்வரர் கொடி. |
| 21 | ஞாயிறு | — | ஏகாதசி விரதம் |
| 23 | செவ்வாய் | — | பிரதோஷ விரதம் |
| 24 | புதன் | — | வல்வை வைத்தீஸ்வரர் கொடி |
| 25 | வியாழன் | — | அமாவாசை விரதம் |
| 26 | வெள்ளி | — | நா. கதிரைவேற்பிள்ளை தினம் |
| 28 | ஞாயிறு | — | கொழும்பு பொன்னம்பலவாணேசர் கொடி |
| 29 | திங்கள் | — | கார்த்திகை விரதம் |

## கொழும்புத்துறையில் சமய தீட்சை

யாழ்ப்பாணத்துக் கொழும்புத்துறையில் விதானையார் ஒழுங்கையில் ஞானவைரவசுவாமி கோயில் மண்டபத்தில் தைப்பூச நாளில் நடைபெற்ற சமய தீட்சை விழாவிற் பங்குபற்றிய மில்க்வைற் தொழிலதிபர், தீட்சை பெற்றோருக்குப் பிரசாதமாகத் திருநீற்றுப் பை, நித்திய கரும விதி, நமச்சிவாயப் பதிகம், நடராசர் படம் முதலியவற்றை வழங்கி ஆசியுரை கூறினர்.

★ சுத்தியடைந்த மனதில் ஞானம் உண்டாகும் ★

# கங்கையும் காசியும்

## கங்கை

இமயம் என்னும் பனிமலையின் தென் பள்ளத்தாக்குகளில் உற்பத்தியாகித் தவழ்ந்து பாய்ந்து பெருகும் பாகீரதி, அலகந்தா என்னும் ஆறுகளின் கலப்பு நதியே கங்கை என்னும் சுத்தநீர்ப் பெருக்காகும். அலகாபாத் என்னும் இடத்தில் யமுனைநதி கங்கையோடு கலக்கின்றது. கங்கைப் பேராறு ஐக்கியப் பிரதேசங்கள் வழியாகப் பாய்ந்து வங்காளத்தை வளம்படுத்தி அப்பாலுள்ள விரிகுடாவிற் கடலொடு சங்கமிக்கிறது. கங்கைப் பேராறு 1556 மைல் தூரம் பாயும் வழியில் சர்தா, இராம், கங்கா, கும்டி, கோக்ரா, சோனை கண்டகி முதலிய ஆறுகள் அதில் கலக்கின்றன. கங்கைக் கரையிற் பல புனித நகரங்கள் அமைந்துள்ளன. அவை வட மதுரை, கௌசாம்பி, பிரயாகை, வாரணசி முதலியனவாகும். வாரணசி என்பது வருணை, அசி என்னும் இரண்டு ஆறுகளினிடையே உருவானதால் வாரணசி எனப் பெயர்பெற்றது. அதனையே காசி என வழங்குகின்றனர்கள்.

கங்கையின் பெருமையை நன்கறிந்த சுப்பிரமணிய பாரதியார் தாம் பாடிய பாரத தேவியின் திருத்த சாங்கத்தில் ஆற்றினைப் பாடும்போது, ''வான்போந்த கங்கையென வாழ்த்து'' என்று சிறப்பிப்பர். கங்கை பாய் நாட்டிற்குத் தம் அன்பிணைக் காட்டியுள்ளார்.

நவநதிகள் என்னும் ஒன்பது ஆறுகளுள் முதலில் வைத்து எண்ணப் பெறுவது கங்கை நதியேயாகும். ஏனையவை யமுனை, நருமதை, சரசுவதி, கோதாவரி, காவிரி பயோஷ்ணி, சரயு, குமரி என்பனவாம்.

## காசி

புண்ணிய நகரம் என்னும் காசி புனித நகரமூமாகும். கோயில்கள் அதிகமுள்ள காசி, எல்லா மதத்தவரும் போற்றி வழிபாடு செய்யும் தலமாகும். அங்குள்ள கோயில்களுள் விசுவநாதர், விசாலாட்சி, அன்னபூரணி ஆலயங்கள் மிகவும் புனிதமானவை, அதிக புகழ் பெற்றவை. விசுவநாதர் உலகத்துக்குக் கருத்தா. உலக முதல்வர். விசாலாட்சி அம்பாள் தனது விசாலித்த திருக்கண்ணேக்கால் உயிர்களைக் காப்பவள். அன்னபூரணி எல்லாச் சீவராசிகளுக்கும் அன்னமூட்டி வளர்ப்பவள்.

காசியைக் குறித்துச் செல்லும்
கால்களே கால்களாகும்
காசியை வழுத்தும் நாவே
நாவெனக் கழறலாமால்
காசியின் கதைகள் கேட்கும்
செவிகளே செவிகளாகும்
காசியை இனிது காணும்
கண்களே கண்களாமாம்

— காசிகாண்டம்

காசிப்பதி சைவசமயத்தவருக்குப் பெரும் புகலிடம், காசியில் இறக்க முத்தி என்பர். காசியில் பத்து மாதங்கள் என்னும் கருத்தில் ஒரு கர்ப்பகாலம் வாழ்தலையே பெரும் பேருகக் கருதுவர். அது இயலாதவர்கள், காசித் தும்பைச் செடி முளைகொண்டு வளர்ந்து பூக்கும் காலமாவது வாழ்தலைப் பயனுள்ளதென்பர். அதுவும் இயலாதவர் பத்து நாட்களாதல் அங்கு தங்குதல் பேறென்பர்.

காசியின் புகழை அதிவீரராம பாண்டியர் 2526 செய்யுள்களில் காசிகாண்டம் எனப் பாடியுள்ளார். குமரகுருபர சுவாமிகள் அங்கு சென்று காசிக் கலம்பகம் பாடி, குமாரசுவாமி மடம் கட்டியுள்ளார். அம்மடம் இன்று திருப்பனந்தாள் ஆதீனத்துச் சுவாமிகளாற் பரிபாலிக்கப் பெறுகிறது.

காசி சைவசமயத்தவருக்கு மிகவும் புனிதமானது என்பது அது முத்தித்தலங்கள் ஏழனுட் சிறந்தது என்பதாலும். பன்னிரு ஜோதிர் லிங்கத்தலங்களுட் சிறந்தது என்பதாலுமாகும். முத்தித்தலங்கள் காசி, காஞ்சி, அயோத்தி, துவாரகை, மதுரா, மாயா, அவந்திகா என்பனவாகும். பன்னிரு ஜோதிர்லிங்கத்தலங்கள் சோமநாதம், மல்லிகார்ச்சுனம், மகாகாளம், ஓங்காரம், வைத்தியநாதம், பீமசங்கரம், இராமேசுவரம், நாகேசம், விசுவேசம், திரியம்பகம், கேதாரம், குஸ்மேசம் என்பனவாம். விசுவேசம் என்பது காசி.

காசி சிவமயமாதலில் தெய்வக் காசி என்றும், ஞானத்தை வழங்குவதால் தருமவனம் என்றும், எல்லாப் பொருள்களையும் அளிப்பதால் அர்த்தவனம் என்றும், மேலான இன்பத்தைச் சுரப்பதால் ஆனந்த வனம் என்றும், முத்திப்பேறுக்குரியதால் முத்திவனம் என்றும் வழங்கும். இன்னும் சிவபெருமான் ஆன்ம ஈடேற்றங் கருதி அயர்வுநீக்கி, ஆதரவுகாட்டி, தாரக மந்திரோபதேசம் செய்தருள்வதால் தாரக க்ஷேத்திரம் எனவும் பெயர்பெறும். இவையேயன்றி அபிமுக்தேசம், கௌரிமுகம், உருத்திரவாசம், மகாஸ்மசானம் முதலிய பெயர்களும் உண்டு.

காசி விசுவேசர் விஸ்வம் என்னும் பேருலகுக்கே பெரியவர். அவரிடத்தில் எல்லாம் ஒடுக்கம். அவர் உயிர்களுக்கு அன்னமூட்டும் அன்னபூரணியையும் தாகந்தீர்க்கும் அருள் சுரக்கும் விசாலித்த திருக்கண் கொண்ட விசாலாட்சியையும் பாகங்களிற் கொண்டவர் என்று குமரகுருபர சுவாமிகள் பாடியுள்ளார்.

காசியில் தவஞ்செய்து சித்தசுத்தியும் முத்திப்பேறும் பெற்ற சித்தர்களும் முனிவர்களும் பலர். மத்தியகாலத்தில் வடநாட்டுப் பிரதேசத்தில் இந்துமத மறுமலர்ச்சி வேலையில் பெருமைபெற்ற தலைவர்களும் வழிகாட்டிகளுமான இராரமானந்தர், கபீர்தாசர், துளசிதாசர், சூர்தாசர், முதலானோர் காசியில் வாழ்ந்து ஆற்றல் பெற்றனர் என்ப.

## மணிப்புரியில் சைவாலயம்

கோயிலில்லாவூரிற் குடியிருத்தலாகாது எனக்கருதிய மணிப்புரி வாசிகள் தாங்கள் குடியேறிய பெருநிலப் பரப்பில் சென்ற தைப்பூச நாளில் ஆலயத்திற்கான அடிக்கல் நாட்டினார்கள். அவ்வமயம் மில்க்வைற் தொழிலதிபர் உடனின்று கிரியைகளிற் பங்குபற்றியுபகரித்தார்.

★ ஞானம் புத்தகப் படிப்புக்கு அப்பாற்பட்டது ★

# சர்வோதயம் சகலருக்கும் மேம்பாடு

சர்வோதயம் என்பது எமக்குப் புதியது அல்ல. அது தமிழிலக்கியங்கள், சமய நூல்கள் சாத்திரங்கள் முதலிய ஏடுகளில் அதிகமாக வந்துள்ளது. யாவர்க்குமாம் எனத் தொடங்கும் பாடலில் எல்லோருக்கும் உரியதை, எல்லோராலும் செய்யக்கூடியதை, எல்லோருடைய நன்மைக்குரியதைத் திருமூலர் கூறுவர்.

சர்வோதயம் சேர்ந்து வாழப் பழக்குவது. சேர்ந்து உதவி செய்யப் பழக்குவது. ஒத்துதவி என்பது தமிழன் கண்ட பொருளாதாரப் பொதுவிதி. காடு திருத்தி, வயலாக்கி உழுது விதைத்து நீர்ப்பாய்ச்சி கதிர்வெட்டி சூடடித்து தானியங்குவிக்கும் வரை மக்கள் ஒத்துதவி செய்கிறார்கள். அவர் இவருக்கு உதவ, இவர் அவருக்கு உதவ, எல்லோரும் ஒருவருக்கு உதவ, ஒருவர் எல்லோருக்கும் உதவ வாழ்வு சிறக்கும், வருவாய் பெருக்கும், வனப்பு அதிகரிக்கும். மனம் விரியும் எல்லோரும் சமம் என்னும் கோட்பாடு நடைமுறையில் நிலவும்.

உணவு தேடுதல் உண்டல் மாத்திரமன்றி வீடமைத்தலிலும் சர்வோதயம் பெருமளவில் சாதிக்கிறது. மர வேலை, மண் வேலை, சீமெந்து வேலை, கட்டட வேலை முதலியவற்றில் திறமை பெற்றவர்கள் தங்கள் சிரம உபகரிப்பால் பாரியவேலை முட்டின்றி நிறைவேறுவதுடன், வேலையனுபவம், திறமை ஆற்றல், நிபுணத்துவம் அதிகரிக்கிற வாய்ப்பும் உண்டாகிறது. கைவினை கரவேல் என்று ஔவையார் அருளியதும் ஊருக்கு உதவு என்று பெரியார்கள் கூறியதும் சிரமதானஞ் செய்யும் செம்மை மனத்தவர்க்குச் சீரிய பணியாகும்.

கலைகள் வளர்ச்சியில் சர்வோதயம்போல் சாதனைக்குரிய கூட்டம் வேறிடத்தில் வாய்ப்பதில்லை. நாட்டுக் கலைகளை விருத்தி செய்து வாழ்வளிப்பதற்கு வாய்ப்பான சமூகம் சர்வோதய சமூகமேயாம். உணவு வளர்ச்சியோடு உறைவிட வளர்ச்சியோடு உணர்வு வளர்ச்சியடையச் சகோதர நேயமும் தேசிய ஒருமைப்பாடும் வாய்க்கும். தமிழன் கண்ட பண்டிகைகள் விழாக்கள் சேர்ந்து வாழப் பழக்குபவை. விழாவுக்குச் சாறு என்றும் பெயர். சாறு என்பது சேர்ந்து சார்ந்துகொண்டு ஆடுவதாகும். கொண்டும் கொடுத்தும் ஆடுவதே கொண்டாட்டம். ஆட்படுதல் என்பதுவும் ஆட்கொள்ளுதல் என்பதும் அகன்ற கருத்துக்கள். அகலமாக வாழுதல் உயர்ந்த இலட்சியமாகும்.

சர்வோதயம், கிராமோதயம், தேசோதயம் என்பன படிக்கிரமமாக வளர்ந்து மலர்ச்சி பெறுகின்ற ஒளி.

## ஒரு சிகரெற்றின் நிதானவிலை

அவுஸ்திரேலிய வைத்திய கலாநிதியாய பீற்றர்சன் ஒரு சிகரெற்றின் உள்ளுடனை நீரில் ஊறவிட்டு ஊசி மூலம் கோழிக்குஞ்சுக்குப் பாய்ச்சினார். அது சிலநிமிட நேரத்தில் மயங்கி இறந்தது. ஒரு சிகரெற் மனிதனின் வாழ்வில் 18 நிமிட நேரத்தைக் குறைக்குமாம்.

ஐம்பது கிராம் புகையிலையில் 24 கிராம் சிகரெற்றின் நஞ்சுண்டு. ஆறு மில்லி கிராம் சிகரெற்றின் நஞ்சு 30 நிமிடத்தில் ஒரு மனிதனைக் கொல்லும்.

# சென்ற மாதப் பணிகள் சில

இராமநாதன் கல்லூரித் திறந்தவெளியரங்கின் ஓரங்களில் சஞ்சீவி மரங்களை நிரையாக நாட்டிய தொழிலதிபர் கனகராசா அவர்கள் இராமநாத வள்ளலின் சாதனைகளை மாணாக்கியருக்கு நினைப்பூட்டினார். இது செய்வதற்கு வசதிசெய்த கல்லூரி அதிபர் உப அதிபர் ஆசிரியர்களுக்கு நன்றி.

★ ★ ★

மட்டக்களப்பில் அக்கரைப்பற்று விபுலானந்த சபையினரின் படிப்பகத்திற்கு நூற்கொடை வழங்கும் வாய்ப்பினை நல்கியவர்களுக்குத் தொழிலதிபர் நன்றி கூறினார்.

★ ★ ★

கோண்டாவில் கிழக்கு அற்புத நர்த்தன விநாயகர் சனசமூகக் கட்டட அடிக்கல் நாட்டுவிழாவில் பங்குபற்றிய தொழிலதிபர் ஊரவர் முயற்சியைப் பாராட்டினார்.

★ ★ ★

நாச்சிமார் அம்மன் என வழங்கும் ஸ்ரீ காமாட்சியம்மன் கோயிலைச் சேர்ந்த சனசமூக நிலையத்தின் புதிய கட்டடத்தை அயலவரான மில்க்வைற் தொழிலதிபர் சமயாசாரப்படி திறந்துவைத்து வாழ்த்தி, இளைஞர்களைப் பணி செய்யும் வண்ணம் வேண்டிக்கொண்டார்.

## குருக்களுக்கும் கொஞ்சம் நெல்

குண்டையூர்க்கிழார் சுந்தரமூர்த்திநாயனாருக்குக் காலந்தோறும் நெல் கொடுத்து வந்தவர். அந்நிகழ்ச்சி இன்றும் திருவிழாப் பொலிவில் நினைவுபடுத்தப் பெறுகிறது. ஆறுமுகநாவலர் அவர்களுக்கு அவர் காலத்துப் பொன்னாவெளி உடையார் நெல் உபகரித்துவந்தார். நாவலர் சைவப் பணிபுரிதல் வேண்டும் என்பது உடையாரின் வேணவா. நாவலர் குருக்கள் அல்லர். அவர் பெரியவர். எங்கள் குருக்கள்மார் கோயிலையும் இறைவனையும் நம்பி வாழ்பவர்கள். எமக்காக இறைவனிடம் வேண்டுகோள் செய்பவர்கள். அவர்கள் எமக்காக இறைவனை மன்றாடி முட்டின்றி வாழ்வதற்காக நாமும் வயல் விளைவு வரும் போது கொஞ்சம் நெல் குருக்களுக்குக் கொடுத்தல் நல்லது. இது இந்து நாகரிகம். இந்து நாகரிகம் செயல் முறைக்குரியது, நடைமுறைக்குரியது.

## ஆரோக்கியமும் நீண்ட ஆயுளும்

பசியின்றிப் புசியாமல், தாகமின்றி நீர்பருகாமல் தேகாப்பியாசஞ் செய்து வாழ்தல் நியமம். இந்திரியத்தை கண்டபடி சிந்தாமல் இருத்தல் இளமையின் இரகசியம். புகைத்தலும் குடித்தலும் கேடு தருவன. பேருண்டி உடம்பைக் கெடுக்கும். மோர், எலுமிச்சம்பழம் உடம்புக்கு நல்லவை. உலாத்துதல் நல்ல அப்பியாசம். சூரிய வொளி படுதல், குளிர்ந்த நீரிற் குளித்தல் நல்லவை. சுறுசுறுப்பும் பேச்சுச் சுருக்கமும் நல்லவை. உண்ணும்போது மௌனமாயிருத்தல், அளவாக நித்திரை செய்தல், கோபங்கொள்ளாமல் இருத்தல், கொதித்து ஆறிய நீரைப் பருகுதல் ஆரோக்கியத்திற்கு வழி.

★ சூழ்நிலைக்கு ஏற்ப ஒழுக்கமும் கடமையும் மாறும் ★



## சிவானந்தர் வழியில் சிதானந்தர்

1. பணிவாக இரு
   ஒழுக்கமாக இரு
   சத்தியம் பேசு
   நன்மையையே பார்
   தியாகஞ் செய்
   தத்துவத்தை அறி
   இறைவனைச் சிந்தித்து இரு
2. மோகத்தைக் குறை
   நேரத்தைப் பயன்படுத்து
   சாதனைகள் செய்
   ஈஸ்வர வழிபாடு செய்
   தெய்விக வாழ்க்கை வாழ்
   சுயநலத்தை விடு
   நீதி நூல்களைப் படி
   விவேகத்தை உபயோகம் செய்
   மடைத்தனத்தை விடு
   வரையறை செய்து வாழ்
3. மனம், வாக்கு, காயம், மூன்றினாலும் ஒழுக்கமாயிருத்தல் வேண்டும்.

மனத்தை ஒருமுகப்படுத்த இறைவழிபாட்டில் அபிடேகம், அர்ச்சனை தூபம், தீபம் பூசையாகிறது.

தியானம் என்பது அந்தரங்கமானது சூட்சுமமானது, சக்தி வாய்ந்தது விசேடமானது.

நம் வாழ்க்கை இறை வழிபாட்டுக்காக அமைய வேண்டும். திவ்விய அநுபூதியை நாம் பெறுதல் வேண்டும்.

செய் காரியங்களில் அகிம்சை, சத்தியம், அன்பு, தயை, பணிவு, பரோபகாரம் இடம்பெற வேண்டும். பரம்பொருளை அடைவதற்கு பக்தி, சிரத்தை, விசுவாசம் அமைதல் வேண்டும்.

பக்தி வளரும் பொழுது இறைவன் புகழ் பாடும் திருமுறைகள், திருப்புகழ், கந்தரனுபூதி முதலியன உதவியாகின்றன.

இறைவனுக்குத் தொண்டுசெய்தல், அதில் ஆசைப்படுதல் பாதசேவனம் எனப் பெயர்பெறும்.

நான் இறைவனைச் சேர்ந்தவன், நான் இறைவனின் அடிமை, எனக்கென்று தனித்தன்மை இல்லை என்னும் எண்ணங்கள் பாவனைகள் பக்தியை வளர்ப்பன.

## தீர்த்தமாடும் வாய்ப்பு

சைவசமயத்தில் தீர்த்தமாடும் வாய்ப்பும் ஒருவகைத் தவமாகும். இறைவனே தாம் ஆன்மாக்கள்மீது கொண்ட தடங்கருணையினால் தீர்த்தங்கள் தோறும் தம்மருளைப் பாய்ச்சியுள்ளார். செழுநீர்த்திரளாயுள்ள செம்மேனியெம்மானை அப்பர் சுவாமிகள் ஆடியின்புற்றார். இறைவன் திருவருளே தீர்த்தம் என்பன திருமுறைகள். ''அத்தா உன் அடியேனை அன்பால் ஆர்த்தாய் - அருள் நோக்கில் தீர்த்த நீராட்டிக் கொண்டாய்'' என்றருளியுள்ளார். மாணிக்கவாசக சுவாமிகள் தீர்த்தச் சிறப்பினை மேலும் சிறப்பித்துள்ளார். ''ஆர்த்த பிறவித்துயர்கெட நாமாடும் தீர்த்தன்'' என்று சிவபெருமானையே தீர்த்தமயமாகக் கண்டு பாடியருளியுள்ளார்.

இதிகாசங்களான இராமாயணம் பாரதம் மிகப் பழைய காலத்திலேயே தீர்த்தமாடும் சிறப்பினைக் கூறியுள்ளன. பாரத புண்ணிய பூமியிலே தெற்கில் கன்னி முதலாக வடக்கில் கங்கை ஈறாக எண்ணில் கோடி தீர்த்தங்கள் உள்ளன. தீர்த்தமாடுதல் புறத்தூய்மைக்கு மாத்திரமன்றி அகத்தூய்மைக்கும் அமைவதாகும். சாதாரண நீர் உடல் வெப்பத்தைப் போக்குமெனின் புண்ணிய தீர்த்த நீர் பிறவி வெப்பத்தையும் போக்கும் என்று தபோதனர்கள் கண்டு கூறியுள்ளார்கள்.

திருக்கோயில்களில் பிரம்மோற்சவம் என்னும் பெருந் திருவிழாக்களினிறுதி நாளிலும், கும்பாபிடேகம் என்னும் குடமுழுக்கு விழாவிலும், சாந்தியுற்சவங்களிலும் திருக்கோயிற் தீர்த்தம் பெரும் பாக்கியமாகிறது. புண்ணிய நதிகளிலும் துறைகளிலும் பொற்பாத்திரங்களில் நீர் மொண்டு வருதல் சைவாகம நியதிகளில் ஒன்று.

புனித நீரிற் கலத்தல் படிதல் பெரும் புண்ணியம். புனித நீர் புரோட்சிக்கப் பெறுதலே பெரும் புண்ணியம். இவ்வாறாயின் புனிதத்திற்கும் புண்ணியத்திற்கும் பெயர்போன கங்கை நதியில் நீராடும் பாக்கியம், காசி விசுவநாதரைத் தரிசிக்கும் பேறு என்னும் பெருந்தவப் பிணைப்போடு, சிவனடியார்களின் சங்கமத்தில் கூடியின்புறுதல் பேரானந்தமாகும்.

இத்தகைய முத்திறப் பேற்றுக்கு முன்னவனே முன்னின்று எம்மனோரை இட்டுச் சென்றாற்போல, சென்னை சைவசித்தாந்த மகா சமாஜத்தார், தங்கள் எழுபத்தாறாம் ஆண்டு நிறைவு விழாவைப் பூர்வகாசி என்றும் வாரணாசி என்றும் வழங்கும் புனித பூமியாகிய காசிப் பதியில் நடத்துவதற்கு அழைத்துச் செல்கின்றார்கள். பூவோடு சேர்ந்த நார் போல நாமும் புனிதம் பெறுகிறோமன்றோ? இது எங்களுக்கு ஒரு வரப்பிரசாதம். பிறவி எடுத்ததன் பெரும் பேறு.

### மதுபானத்தின் செயல்

யப்பானியரின் பழமொழியொன்று நிரம்பிய அநுபவ ஞானம் பொதிந்துள்ளது. ஒருவன் முதலில் மதுவருந்துகிறான். அது மறுமுறை அருந்தத் தூண்டுகிறது. பின் அருந்திய மது மனிதனை முடிக்கிறது.

★ முறைதவறிப் புறவுலகைப் பார்த்தால் துன்பம் வரும் ★



## ஔவை அருந்தமிழ்

### நான்கு நாடுகளின் சிறப்பை நான்கு வரிகளிற் பாடியமை

பழைய காலத்தில் மூவேந்தர் எனப் புகழ்பெற்ற சேரர், சோழர், பாண்டியர் என்பார் பரம்பரையாக ஆண்டுவந்த பெரும் நிலப்பரப்புக்கள் சேரநாடு, சோழ நாடு, பாண்டிநாடு என நிலவிவந்தன. இவற்றோடு தொண்டைமண்டலம், ஈழமண்டலம் என இருநிலப்பரப்புக்களும் புகழ்பெற்றிருந்தன. ஈழமண்டலம் கடல்கடந்த நாடு. அது இலங்கை.

ஒவ்வொரு நாடும் ஒவ்வொரு வகையில் சிறந்து விளங்கியது. ஆனால் புலவர்கள் தனிப்பட்ட மன்னர்களைத் திருப்திப்படுத்துவதற்காக நாடுகளுள் ஏற்றம் இறக்கம் கற்பித்துப் பாடுவதும் வழக்கமாயிருந்தது. தங்கள் சொல்லலங்காரப் பாடல்களை ஔவையார் என்னவாகக் கருதுகிறாரோ எனக் கருதிய புலவர்கள் அந்நாடுகளின் தன்மையைப்பற்றிப் பாடுமாறு கேட்டார்கள்.

அவனவன் பெருமையையும், அதனதன் தன்மையையும் உள்ளவாறே காய்தல் உவத்தலின்றிப் பாடும் ஔவையார் பெருந்தன்மையோடு சொன்னார். மலைநாடு என்னும் சேரநாட்டில் நல்ல காடுகள் உள்ளன. அங்கே காடுபடு திரவியங்களுட் சிறந்த யானைக்கூட்டம் உண்டு. மாட்சிமை மிக்க சோழநாட்டில் வற்றாத வளமுள்ள காவிரி நீர்வசதியுண்டு. அதனால் அங்கேயுள்ள வயல்கள் யாவும் ஏராளமாக நெல்விளைவு தருதலால் சோழநாட்டிற் சோற்றுக்குப் பஞ்சம் இல்லை. பூழியர் என வழங்கும் பாண்டியருக்குச் சொந்தமான தென்னாடு என்னும் பாண்டி நாட்டினணித்தாயுள்ள கடலில் கடல்படுதிரவியங்களிற் சிறந்த முத்துக்கள் ஏராளமாகக் கிடைக்கின்றன. தொண்டைமண்டலம் எனப் பெயர்பெற்ற நிலப்பரப்பில் நல்ல நீர்ப்பாசன வசதியுண்டு. அங்கே அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை முதலியவற்றால் சிறந்த தெளிந்த மனத்தினராய சான்றோர்களுக்குக் குறைவில்லை. என்றார். பாடினார்.

வேழம் உடைத்து மலைநாடு, மேதக்க
சோழவளநாடு சோறுடைத்து — பூழியர்கோன்
தென்னாடு முத்துடைத்துத் தெண்ணீர் வயல்தொண்டை
நன்னாடு சான்றோர் உடைத்து.

## வேப்பஞ் சருகை வீணாக்காதீர்கள்

வேம்பு இலையுதிர்க்கத் தொடங்குகிறது. பொன்னிறமாகப் பழுத்து உதிரும் வேப்பமிலை நல்ல இயற்கைப் பசளை. துப்புரவாகக் கையால் அள்ளிக் குவிக்கக்கூடியது. விரைவில் உக்கிப் பசளையாகிப் பயிர்களைச் செழிக்கச் செய்வது.

## அரதத்த சிவாசாரியரின் அழுகை

கஞ்சனூரில் உள்ள சிவாலயம் பழம் பெருமை வாய்ந்தது. அவ்வூரில் அரதத்த சிவாசாரியர் என்னும் சைவப் பெரியார் இருந்தார். அவர் சிவபெருமானே முழுமுதற் கடவுள் என வேதங்கள் ஆகமங்கள் மூலம் நிரூபித்த கல்விமான். அவர் ஒரு நாள் ஆலயத்தை வலம் வந்த வேளையில் அங்கே கோயிலதிகாரி கோயிற் பணிப் பெண்ணைப் பெலமாகப் பிரம்பால் அடித்ததைக் கண்டார். உடனே அவர் நிலத்தில் விழுந்து புரண்டு விம்மி விம்மி அழுதார். அவர் அழுதமைக்குக் காரணம் அறிய விரும்பிய பலர் அங்கே வந்து குவிந்தனர். அவர் ஏன் அழுதார் என்று பெரியவர் ஒருவர் கேட்டபோது அவர் சொன்னார் ''ஐயா! இந்தப் பெண் நேற்றுக் கோயிலுக்கு வராத காரணத்திற்காக அதிகாரி இவளை அடித்துத் தண்டிக்கிறார். ஆனால் நானோ சென்ற மாதம் மூன்று தினங்களாக இங்கே வரவில்லை. என்னைத் தண்டிப்பாரில்லையே என்று அழுகின்றேன்'' என்றார். அதைக் கேட்ட எல்லோரும் ''நித்தலும் எம்பெருமான் கோயில் புக்கு'' என்னும் அப்பர் தேவாரத்தை நினைந்து ஒழுங்காகத் திருக்கோயிலுக்குப் போவாராயினர்.

## குரக்கன்

உணவுத் தானிய வரிசையில் நெல், கோதுமை ஆகியனவற்றை அடுத்துவரும் குரக்கன் கேழ்வரகு என்றும் பெயர்பெற்ற சிறந்த தானியமாகும். அது இன்று மாடமாளிகைகளில் வாழ்வோரின் பிரதான உணவுத் தானியமாய் இருப்பதில் வியப்பில்லை. பெரியவர்கள் செல்வர்களின் தேவைநோக்கிக் கமக்காரர் அதனை அதிகமாகப் பயிரிடாமல் இருப்பதுதான் வியப்பு.

குரக்கனுக்கு என்றும் எங்கும் விலையும் மதிப்பும் உண்டு. அதைத் தேடித் திரிவார் பலரை நேரில் நாம் அறிவோம். குரக்கனைக் கோடைப்பயிராகச் செய்து நல்ல விலைக்கு விற்கலாம். வரண்ட நிலத்தில் ஓரளவு நீர்வசதியும் இருந்தால் நல்ல வேளாண்மை உண்டாகும்.

குரக்கன் ஒட்டு மாட்டுக்கு நல்ல உணவாகும்.

இம்முறை அண்ணா கமம் முதலாகவுள்ள பல கமக்காரர் குரக்கன் செய்துள்ளார்கள். சின்னஞ்சிறிய அளவில் மாவரைக்கும் இயந்திரங்கள் வைத்திருப்போர் சிலர் குரக்கனை நன்றாகக் கசக்கிப் புடைத்துக் கழுவிக் காயவிட்டு மாவாக அரைத்துச் சிறிய பைக்கெற்றுகளில் விற்கிறார்கள்.

குரக்கன் மாவில் பிட்டு, இடியப்பம், ரொட்டி, களி, கூழ் செய்து பயன்பெறுகிறார்கள். சிங்களநாட்டில் பலாச இலைபோன்ற ஒருவகை இலையில் குரக்கன் மாவுடன் சித்துள் பாணி கலந்து பிசைந்து அப்பளம் போன்று மெல்லிதாகச் செய்த ஒருவகை அப்பத்தை, நீராவியில் அவித்து அமுதம் என உண்கிறார்கள். நாமும் குரக்கனைக் கைவிடாது சுகவாழ்வில் மலர்ச்சி பெறுவோமாக.

★ மனதை உள்ளே செலுத்த ஏகாந்தம் இனிது ☸

## அடுக்கு மொழிகள் சில

(முற்றொடர்)

வம்பரும் தும்பரும்
வம்பு தும்பு
வயல் வரம்பு
வயாவும் வருத்தமும்
வயிற்றை வாயைக் கட்டி
வரத்துப் போக்கு
வரவு செலவு
வரிசை வரிசை
வருக வருக
வரை துறை
வரை முறை
வலிந்து நலிந்து
வலிவும் வனப்பும்
வழக்கு வம்பு
வளமும் உரமும்
வளைந்து சூழ்ந்து
வளைந்து நெழிந்து
வற்றி உலர்ந்த
வற்றி வரண்ட
வறுமையும் நோயும்
வன்மை மென்மை

## வேதநெறியிற் சைவத்துறை

நாங்கள் சிவனடியார்கள்; நாங்கள் சைவசமயத்தவர். எங்களுக்கு வேதமும் வேண்டும் ஆகமமும் வேண்டும். சிவ சமயத்தவராய எங்களுக்கு ஆகமம் சிறப்பு நூல். சிவபெருமானை அணுகும் முறையையும் அடையும் வழியையும் வேதாகமங்கள் கூறும். வேதாகமங்களை நன்கறிந்தவர் திருமூலர். அவர் தமது திருமந்திரத்தில் இரண்டைப் பற்றியும் ஒருவரியிற் பாடியருளி மூன்றுவரிகளில் விளக்கியுள்ளார்.

திருச்சிற்றம்பலம்

"வேதமோ டாகமம் மெய்யா மிறைவனூ
லோதும் பொதுவுஞ் சிறப்பு மென்றுன்னுக
நாத னுரையிவை நாடி லிரண்டந்தம்
பேதம தென்னில் பெரியோர்க் கபேதமே."

திருச்சிற்றம்பலம்

வேதம் சிவாகமம் ஆகிய இரண்டையும் ஆராய்ந்த ஸ்ரீ நீலகண்ட சிவாசாரியர், "வேதாகமங்களிற் பேதங் கண்டிலோம்" என்று தமது பிரம சூத்திரப் பேருரையாய நீலகண்ட பாடியத்தில் எழுதியுள்ளார். நீலகண்ட சிவாசாரியர் வடமொழியிற் செய்தருளிய பாடியத்தைச் சுத்தாத்துவித சைவ சித்தாந்த பாடியம் எனக் கண்ட பிரம்மஸ்ரீ செந்திநாதையர் என்னும் யாழ்ப்பாண வாசி காசியில் தங்கியிருந்து அதனைத் தமிழ் செய்துள்ளார். அன்றி காசிவாசி செந்திநாதையர் எனப் பெயரும் பெற்றுள்ளார். செந்திநாதையர் கங்கைக் கரையில் தங்கியிருந்து சைவத்திற்கும் தமிழுக்கும் செயற்கரிய பணி செய்துள்ளார். தேவாரத் திருமுறைகளைப் பண்ணமைதியோடு காரங்கி வாத்திய சகிதம் பாடும் பாரம்பரியத்தையும் தம் காலத்திற் பழக்கியதோடு, ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்கள் சிவபூசை செய்யும்போது திருமுறையோதும் பாக்கியத்தையும் பெற்றிருந்தார். அவர் நாவலரவர்களின் நன் மாணுக்கராய்க் கல்வி கற்கும் சிறப்பும் பெற்றவர்.

சிவாகமத்தைச் சிவஞானம் என்பர். ஆகமத்தைச் சிறப்பு நூலாகக் கொண்ட சைவசமயத்தவரை ஆகமாந்திகள் என்பர். ஆகமம் என்றாலே சமயம் என்னும் கருத்து இலங்கையில் வழங்குவதுண்டு. ஆகமத்திற் சொல்லப் பெருதது ஒன்றுமில்லை; ஆகமத்தில் எல்லாம் உண்டு. இறைவன் எமக்கு ஆகமமாகிநின்று அண்ணிப்பவன். ஆகமம் பெரு விருப்பத்திற்குரியதாதலின் மாவேட்டாகமம் எனப் பெற்றது. வேட்டல் விரும்புதல். ஆகமங்களைத் தேடி அறிதல் அறிஞர் பெருமக்களின் கடனாகும்.



## Only One God

**Swami SIVANANDA**

There is only one God. But names and aspects are endless. Call Him by any name and worship Him in any aspect that pleases you. You are sure to see Him and get His grace and blessings.

Brahma, Vishnu and Siva are the three forms of the one God of the Hindus.

Purity, Charity, control of the senses, penance, truthfulness, renunciation, compassion to all beings, courage, fortitude, absence of hatred and pride will help you to attain God.

## ஆத்தி சூடியும் கொன்றை வேந்தனும்

வேதவாக்கியமோ மநு நீதியோ, யாக்ஞவல்கியர் வாக்கியமோ என ஐயுறுமளவில் தமிழ் மொழியில் சின்னஞ் சிறுவர்களுக்கு ஔவைப்பாட்டியார் அன்று தந்தவை ஆத்தி சூடி, கொன்றை வேந்தன் என்னும் ஆதார அடிப்படை நல்லொழுக்க நல்லற நூல்களாகும். எங்கள் சிறுவர் சிறுமியர் இரண்டாம் வகுப்பிலேயே இவற்றை வீட்டிற் படித்துப் பெற்றோரிடம் ஒப்பித்தல் விரும்பத்தக்கது.

★ தவத்தின் மூலம் உள்ளத்தைத் தூய்மை செய்யலாம் ★

## அச்சக வித்தகர் அமரராயினர்

### அவர் ஆன்மா சாந்தி அடைவதாக

ஆரம்பத்தில் அச்சக வித்தகர், அநுபவத்தில் சித்தாந்த வித்தகர், வாழ்வில் தொண்டர் நாயகம், முயற்சியில் தேனீ, அடக்கத்தில் நள்ளி, கொடையில் பாரி, இன்னும் எத்தனை உவமைகள் வேண்டுமாயினும் அத்தனை நல்லியல்புகளுக்கும் இருப்பிடமான சாதாரண மனிதன் அவர். இன்று அமரர்.

தி. கி. நாராயணசாமி என்றால் சாது அச்சுக்கூடம் உருவாக்கிய பரம சாதுதான். திரு. வி. கலியாணசுந்தர முதலியாரின் மாணக்கன் என்றால் ஆறுமுகநாவலரின் பாரம்பரியம் தான். கிழக்கு மருதூர் தந்த தொண்டர் திலகம், சைவசித்தாந்த மகா சமாஜத்தின் உபகாரியும் தொண்டரும் தலைவரும்.

ஐம்பதாண்டுகள் சைவசித்தாந்த சமாஜத்தோடு நெருங்கிய தொடர்பு கொண்டு வாழ்ந்தவர், சமாஜப் பதிப்புகளாக வெளிவந்த திருமுறைகள், சித்தாந்த சாத்திரங்கள், திவ்விய பிரபந்தங்கள், அருளிப் பாடுகள் முதலிய நூல்கள் மீண்டும் மீண்டும் சுத்தப் பதிப்புகளாகப் பல்லாயிரம் பிரதிகள் பவனிவரப் பாடுபட்டுழைத்த பண்பாளர்; தாமே தம் சொந்தப் பணத்திலும் பல நூல்களை வெளியிட்டுத் தமிழும் சைவமும் காத்தவர்.

சென்ற ஆண்டு வைகாசி மாதம் சைவசித்தாந்த சமாஜத்தார் தங்கள் பவள விழாவினை யாழ்ப்பாணத்தில் நடத்திய போது அடக்கமே உருவாய், அங்கத்தவர் அத்தனை பேரையும் இங்கழைத்து வந்து பணிபுரியச் செய்த பெரியவர் இன்றில்லை. அவர் 11-5-81 ஆம் நாள் தமது பொறுப்புக்களிடையே சிறுபொழுது ஓய்வு எடுத்துக் கொண்டு மில்க்வைற் தொழிலகப் பணியைப் பார்க்க வருகை புரிந்து கண்டு மகிழ்ந்து எழுதிய சுருக்க வாசகம் வருமாறு.

''அடியேனது 75 ஆண்டுகளில், நல்ல கொள்கைகளைக் கடைப்பிடித்து சேவை செய்யும் சேவைக்கே தன்னை இழந்தவரைக் கண்டேன். அவர் விடாப் பிடியாகக் கொண்ட பல உயிர்க் கருத்துக்களை நேரிற் பார்த்தேன். அவருடைய தொழில் முயற்சி பெருகி நின்று தழைத்து எல்லோர்க்கும் நிழல் தருவதாக. இறைவன் அருள் துணைநிற்பதாக.''

தி. கி. நாராயணசாமி

## சிவம்பெருக்கும் தெய்விக மாநாடு

வேதநெறி தழைத்தோங்க மிகு சைவத்துறை விளங்கப் பூத பரம்பரை பொலியப் புனிதவாய் திறந்தருளிய திருஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் திருவடி சென்ற வழியினைப் பத்தியாகப் பின் தொடர்ந்து சிவம் பெருக்கும் சீலர்கள் சென்னை சைவசித்தாந்த சமாஜத்தினர். முன்னோர்களான ஆன்றோர்கள் முன்பு செய்த புண்ணியச் செயலின் பேறாக இவர்களுக்கு அறநெறியும் அருள்நெறியும் பாலிக்கப் பெற்றுள்ளன.

சிவம் பெருக்கும் சீரிய கூரிய செம்மையாளராய இவர்கள் சேர சோழ பாண்டி மண்டலங்களிற் சிவம் பெருக்கியதோடு தொண்டை மண்டலம் ஈழமண்டலங்களிலும் பல்லாண்டுகள் பணி செய்துள்ளார்கள். எங்கள் ஈழநாட்டில் இவர்கள் காலத்துக்குக் காலம் நான்கு முறை வருகை தந்து விழா நடத்தி எம்மனோரை வழிப்படுத்தியாட் கொண்டுள்ளார்கள். எம் முந்தையோர் இவர்கள் தமிழ் நாட்டிற் சைவம் பரப்பியபோதெல்லாம் பேசியும் தலைமைதாங்கியும் பற்குபற்றியுள்ளார்கள். இங்ஙனம் பரஸ்பரம் கொண்டும் கொடுத்தும் குடிவழி தொண்டு செய்வதற்கு நாம் என்றென்றும் திருவருளுடையோமாக.

## எலுமிச்சம் பழம்

எலுமிச்சம் பழத்தின் குண மகிமைகளைப் பதார்த்த குணசிந்தாமணி சொன்னவைகளுக்கு மேலாக மேற்கு நாட்டு வைத்திய நிபுணர்கள் இன்று கண்டு கூறுகிறார்கள். ஆய்வு ஆராய்ச்சி செய்து அதன் அற்புதமான உபயோகத்தைக் கண்டுள்ளார்கள். எலுமிச்சம் பழம் உடன் உபயோகமாகும் அளவில் ஊறுகாயாகவும் பயன் தருவது. எலுமிச்சம் பழம் ஓரளவு மலிவாகக் கிடைக்கும்போது அதனை நாம் பயன் செய்வோமாக. துப்பரவான எலுமிச்சம்பழக் கோதுகள் எமக்குப் பெருந்தொகையாகத் தேவை. விற்பதற்கு விரும்புபவர்கள் மில்க்வைற் தொழிலகம் தபாற்பெட்டி 77, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் தொடர்புகொள்ளலாம்.

## தம்பதிகளுக்கு இரட்டைப் பரிசு

ஏழாலையைச் சேர்ந்த திரு. மாணிக்கம் இராமச்சந்திரன் மில்க்வைற் தொழிலகத்தில் வேலைபார்ப்பவர். அவர் சென்ற 3-2-82 புதன்கிழமை மாலை சிறுப்பிட்டி வட பகுதியைச் சேர்ந்த செல்லப்பா தம்பதிகளின் பெண் நவமணி நங்கையைத் திருமணஞ் செய்தபோது, சபையைச் சிறப்பித்த தொழிலதிபர் கனகராசா அவர்கள் தம்பதிகள் இருவரும் கூட்டு மொத்தமாக இருபது ஆண்டுகளில் எண்பதினாயிரம் ரூபா இலங்கை வங்கியில் பெறக் கூடியதாகப் பணமுதலீடு செய்து அன்பளித்தார். தம்பதிகள் எல்லாப் பேறுகளும் பெற்று வாழ்வாராக.

★★★★★  ★★★★★

## தம்பதிகள் வாழ்க

இணுவில் கிழக்கு திரு. செல்லத்துரை தளையசிங்கம் அவர்களும் சிறுப்பிட்டி வடக்கு செல்வி தவரஞ்சினி நடராசா அவர்களும் சென்ற 8-2-82 திங்கட்கிழமை மாலை செல்வச் சந்நிதியில் திருமணஞ் செய்துகொண்டார்கள். மணமகன் மில்க்வைற் தொழிலகத்தைச் சேர்ந்தவராகையால் மில்க்வைற் தொழிலதிபர் இவர்களுக்குத் திருமணப் பரிசாக இலங்கை வங்கியில் முதலீடு செய்து வழங்கிய இதழ் இன்னும் இருபது ஆண்டுகளில் எண்பதினாயிரம் ரூபாவாக முதிர்ந்து கிடைக்கும்.

★ பண்பட்ட மனத்தினன் தற்பெருமை கொள்வதில்லை ★

# ★ பாரத ஜனுதிபதி ★

மாட்சிமை தங்கிய பாரத ஜனுதிபதி அவர்கள் எம் நாட்டுக்கு வந்து போயுள்ளார். இந்திய ஜனுதிபதி மக்களின் பதி. மக்களால் அவர்களின் வாக்களிப்பால் மகத்தாகத் தெரியப் பெற்ற பெருமதிப்புக்குரிய புருடர்.

வெள்ளைக்காரர் ஆட்சிக்காலத்தில் அரசப் பிரதிநிதி என வழங்கப் பெற்ற தேசாதிபதி நாயகம் பலவாய மண்டலங்களின் மதிப்புவாய்ந்த தேசாதிபதிகளுக்கு மேலாக விளங்கிய பெரியவர்.

இந்தியா சுதந்திரம் பெற்றுப் பாரத நாடானதும் பெருமதிப்புக்குரிய கலாநிதி இராசேந்திரபிரசாத் மக்களால் தெரியப்பெற்ற ஜனுதிபதியாய் இருந்தார். அவர் வட இந்தியப் பல்கலைக்கழகப் பேராசிரியராயிருந்த காலத்தில் எங்கள் நாட்டுப் பட்டதாரிகள் சிலரை உருவாக்கியுள்ளார்.

இராசேந்திரபிரசாத் அவர்கள் தமது பேரதிகாரத்தின் பெருஞ்சுமையைச் சட்டத்துறை நாயகம் சேதல்வாத் ஆலோசனையின் வண்ணம், பிரதம மந்திரியாராயிருந்த பண்டித நேருவிடம் கையளித்திருந்தார். அதனுல் அவர் மக்களின் அபிமானத் தலைவராய்க் கோலாகல வைபவங்களில் முதலிடம் வகித்து வந்தார்.

இராஜன் பாபுவுக்குப் பின்னர் தத்துவமேதை கலாநிதி இராதாகிருஷ்ணன் பாரத ஜனுபதியாயிருந்தார். வடக்குத் தெற்கு என்று பாகுபாடில்லாத முறையில் தென்னகத்து இராதாகிருஷ்ணன் நாடு முழுவதற்கும் அபிமானத் தலைவராயினர்.

பாரத நாட்டில் மதப்பாகுபாடு இல்லை என்பதைக் காட்டும் வகையில் கலாநிதி சாகிர்குசேயின் அவர்கள் ஜனுதிபதியாய்த் தெரியப் பெற்றுர். இவரும் பல்கலைக்கழகப் பேராசிரியர், உபவேந்தர் பதவிகள் வகித்த கல்வி நிபுணர். காந்திய முறையில் கைதேர்ந்த பண்பாட்டினர். ஆரம்ப கல்விமுறைகளுக்குப் புத்துயிர்கொடுத்த உத்தமர்.

மற்ருெரு தென்னகத்தாரான கிரி அவர்கள் முன்னர் இலங்கையில் இந்திய தானிகராயிருந்து எம்மவரை நன்கறிந்தவர். இந்திய ஜனுதிபதிகள் தெரிவில் தனிப்பட்ட சுயேட்சையாளராய் நின்றும் பெருவெற்றியீட்டிய அபிமானத் தலைவர்.

இராசேந்திரபிரசாத், இராதாகிருஷ்ணன், கிரி முதலாய ஜனுதிபதிகள் முன்னர் இலங்கைக்கு வருகைபுரிந்த போது யாழ்ப்பாணத்தையும் பார்த்துப் பேசிப் போனவர்கள்.

பாரதத்தின் மற்ருெரு முஸ்லிம் பிரமுகர் பாக்ருதீன் அலி ஆமெட் அவர்கள் சிலகாலம் ஜனுதிபதியாயிருந்து, பதவிக்காலத்திலேயே காலமானவர்.


தென்னகத்தாரான நீலன் சஞ்சீவ ரெட்டி என்பார் எல்லாக் கட்சிகளுக்கும் ஏற்றவராயிருந்தமையாற்போலும் ஏகமனதாகத் தெரியப் பெற்ற ஜனுதிபதியாயினர். ஜனுதிபதி வரிசையில் இவர் ஆறுமவர். அரசியற் பங்கிலும் பகிரங்க பரிபாலனத் துறையிலும் பேராற்றல் படைத்தவர்களுள் சஞ்சீவ ரெட்டியும் ஒருவர்.

பாரத ஜனுதிபதி பாரம்பரியம் முப்பத்தைந்து ஆண்டுகளாக ஒழுங்காக நடைபெற்று வருகிறது. இனிமேலும் இந்தியப் பாரம்பரியம் இனிது நடைபெறும்.

நீலன் சஞ்சீவ ரெட்டி அவர்கள் நல்லவர். நாகரிக மானவர். தாம் 45 ஆண்டுகளாக அரசியல் வாழ்வில் தொண்டை கிழியக் கத்தியது போதும், இனிமேல் நான் அதிகம் பேசமாட்டேன் என்று விசுவாசப் பிரமாணஞ் செய்துள்ளார். பேசிப் பேசி வெட்டி விழுத்திய வீராதி வீரர்களுக்கு இஃது ஒரு பாடமாகும்.

இவர் முன்னர் தமிழ் நாட்டில் 1949 ஆம் ஆண்டு முதலாக மதுவொழித்தல், காடுவளர்த்தல், வீடமைத்தல் ஆகிய முப்பெரும் துறைகளுக்கு மந்திரியாயிருந்தவர். பின்னர் அவர்தம் ஆந்திர நாட்டுக் காங்கிரஸ் சபையின் தலைவராயிருந்தவர். பின்னர் ஆந்திர மாநில முதலமைச்சராய் இருந்து பணி செய்தவர். காங்கிரஸ் தலைவராயும் அலங்கரித்தவர். ஜனதா கட்சிப் பிரதிநிதியாயும் இருந்தவர். லோகசபா என்னும் பெருமன்றத்தில் சபாநாயகராய்த் தெரியப்பெற்ற பெருமையும் இவருக்குண்டு. ஆந்திர மாநிலத்தில் ஆனந்தப்பூரில் உழைப்பாளிகள் குடும்பத்தில் 1913 ஆம் ஆண்டில் தோன்றிய ரெட்டி அவர்களுக்கு இன்னும் எழுபதாகவில்லை. கடமையில் கருத்தூறிய இவர் பணி செய்வதில் பற்றுள்ளம் கொண்ட பணியாளர். தாயைத் தெய்வமாக மதிக்கும் ரெட்டி அவர்கள் நல்ல வழிகாட்டியாவர்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★



பிறந்தநாளுக்கு ஒரு மரம் நடுக என்ற வாக்கியத்துக்கமைய தொழிலதிபரின் 54ஆவது பிறந்தநாள் ஞாபகார்த்தமாக சர்வோதயச் சிறுவர்கள் தங்கள் நிலையங்களில் மரம் நாட்டுகிருர்கள்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

★ மனம் நிறைநிலை அடைவதற்குத் தொண்டு அவசியம் ★



# இறைவன் இருக்கும் இடம்

சுவாமி சிவானந்தர்

இறைவன் அணுவிலும் அணுவாக, பெரிதினும் பெரிதாக உங்கள் இதயாசனத்தில் வீற்றிருக்கிறார். நீங்கள் விவாதத்தின் மூலமாகவோ விவேகத்தின் மூலமாகவோ இறைவனை அடைய முடியாது. சிரத்தைமிக்க சாதனைப் பயிற்சி, அல்லது துறவு மனத்துடன் ஆன்மீகப் பயிற்சி மூலம் இறைவனை அனுபவிக்கலாம்.

## சாதனைக்குச் சாதகமான இடம்

சிரத்தைமிக்க சாதனைக்குரிய இடங்களில் ரிஷிகேசமும் ஒன்று. இமயமும் கங்கையும் உடலுக்கும் உள்ளத்துக்கும் வளர்ச்சியும் உயர்ச்சியும் உண்டாக்குவன. இங்கே சாந்திஞானம் உண்டாகும்.

## அன்பு செய்தலும் பணிசெய்தலும்

செய்கின்ற காரியங்களில் தூய்மையான அன்பு இருக்குமாயின் அது அனைவரையும் பிணிக்கும் பசையாகும். தூய்மையான மனமும் நேசமான இருதயமும் உள்ளவர்கள் இறைவனின் ஆட்சிக்குள் அரவணைக்கப்பெறுகிறார்கள்.

## கர்மயோகி தகுதிவாய்ந்தவன்

அகந்தை, காமம், கோபம், பேராசை இல்லாமல் பெயர், புகழ், பிரதிபலன் எவற்றையும் எதிர்பாராமல் எவன் பணி செய்கின்றானோ அவன் பெருந்தகை. பெருந்தகுதிவாய்ந்த கர்மயோகி. கர்மயோகிக்குச் சாதி, மதம், நிறம் முதலிய வேறுபாடுகள் கிடையா.

அவன் ஆடம்பரமில்லாதவன். அடக்கமானவன். கர்மயோகி இகழ்ச்சி, அவமரியாதை. கடுஞ்சொல், குற்றச்சாட்டு, பழி, துன்பம் எல்லாவற்றையும் பொறுத்துக் கொள்வான்.

## பிள்ளைகள் மனிதராதல்வேண்டும்

கடவுளை நம்பு, பகலிற் செய்த பிழைகளை மாலையில் எண்ணிப்பார். அடுத்தநாள் பிழைவிடாமலிரு. புத்தியும் பரிசுத்தமும் பக்கத்துணையானவை. யான் எனது என்று வாய்காட்டலாகாது. என்றும் முகமலர்ச்சியோடு இரு. ஆசைப்படாமல் மனத்தை உயர்த்து கொல்லாமை, கொன்றதை உண்ணாமை, பொய், களவு இல்லாமலிருத்தல் நல்ல தவம். இடையிடையே உபவாசமாயிரு. குரு பக்தி உள்ளவனாய் இரு.

## அறிவுக்கு ஆதாரம்

நித்தியானந்தம் ஆத்மாவுக்குள்ளேயே இருக்கிறது.
அதிக தொல்லை கொடுக்கும் உறுப்பு நாக்கு.
பயங்கரமான பகைவன் மனம்.
சிறந்த நண்பர், ஞானியர், நல்லவர்கள்.
உண்மையான தந்தை குரு.
புண்ணிய நதி பிரம்ம ஞானம்.
உண்மையான அரசன் சீவன்முத்தன்.
சிறந்த தர்மம் சேவை

# TOLERANCE

Swami SIVANANDA

Tolerance is enduring of offensive persons or opinions. It is a virtue. Tolerance is needed in all spheres of life - social, economic, political and religious Fights, quarrels, raptures, frictions in society and domestic circles and war are all due to lack of tolerance. All social religious and political institutions are held together by the cohesive force of tolerance. Tolerance is marvelous lubricating oil which helps the smooth revolutions of the wheels of life.

A self controlled man only can be endowed with tolerance. Intolerance denotes lack of refinement and culture. It shows the inability to appreciate different aspects in a thing. It is a sign of narrowness of heart and mind. He who has a large heart, who is free from prejudice, hatred, pride and crookedness, who has his emotions under control, who is noble, can become a man of tolerance

# சைவச் சிறுவர் இல்லத்தில் சுதந்திர தினம்

திருநெல்வேலியிலுள்ள சைவச் சிறுவர் இல்லத்திற்கு உலகப் பெரியார்களைக் காலந்தோறும் அழைத்துச் சென்று அறிமுகஞ் செய்து வைக்கும் மில்க்வைற் தொழிலதிபர் அப்பிள்ளைகளுக்கு ஓரளவில் உபகரிப்புஞ் செய்வதுண்டு.

நல்ல நாள் பெரிய நாள் என வரும் தினங்களில் அந்தப் பிள்ளைகளைப் போய்ப் பார்க்கும் தொழிலதிபர், தனித்துப் போவதுமில்லை வெறுங்கையோடு போவதுமில்லை. சைவசமயத்தவர் என்பதால் அப்பிள்ளைகள் சென்ற காலத்தில் சமய தீட்சையும் ஒழுங்காகப் பெறுவதற்கு வசதியும் வாய்ப்பும் செய்தவர் இவரே.

சென்ற 4-2-1982 நாடெங்கும் சுதந்திரதினக் கொண்டாட்டம் நடைபெற்ற போது சைவச் சிறுவர்கள் தங்கள் வாழ்வில் ஒரு புது அத்தியாயத்தைத் தொடங்கினர். கைவினை கரவேல் என்று ஔவையார் சொன்ன வகையில், கைத்தொழில் ஒன்றைக் கற்றுக்கொள் என்று காந்தீயக் கவிஞர் சொன்னார்.

வேலையற்றிருக்கும் போது விளையாட்டாகக் காகிதப் பூ செய்யவும், மாலை தொடுக்கவும், பன்ன வேலை செய்யவும் பிள்ளைகள் பழகுதல் வேண்டும் எனக் கருதிய தொழிலதிபர், அவற்றுக்குத் தகுதிவாய்ந்த திறமை சாலிகளை அங்கு அழைத்துச் சென்று அறிமுகஞ் செய்து, பயிற்சி நெறியில் முதற் பாடத்தை 4-2-82 இல் பழக்கியுள்ளார். பிள்ளைகள் கைத்திறனுற்றுக் கவலையின்றி வாழ்வாராக.

★ நெருக்கடியில் நல்லவனாயிருப்பவன் பண்பட்டவன் ★

## தமிழ் வளர்த்த ஐரோப்பியர் சிலர்

### வணக்கத்துக்குரிய றொபேட் கால்ட்வெல்

தமிழ்நாட்டில் திருநெல்வேலியிலுள்ள இடையன்குடி என்னும் இடத்தில் ஐம்பது ஆண்டுகள் மறைத்தொண்டு புரிந்த கால்ட்வெல் அயர்லாந்து தேசத்தவர், ஆங்கிலேய திருச்சபை மூலம் 1838ஆம் ஆண்டு தமிழ்நாடு புகுந்தவர். இருபத்துநான்கு பராயத்தவராய் வந்த அவர் 1891ஆம் ஆண்டில் ஓய்வுபெற்றுச் சிலகாலம் கோடைக்கானலில் வாழ்ந்தவர். மதப்பயிற்சிபெற்று 1841ஆம் ஆண்டில் குருப்பட்டம் பெற்றவர், 1877ஆம் ஆண்டில் பிஷப் பட்டம் சூட்டப்பெற்றார். கோடைக்கானலில் வாழ்ந்த காலத்தில் 28-8-1891இல் காலமாகி, இடையன்குடியில் அடக்கஞ் செய்யப்பெற்றார்.

இராசாங்க சங்கத்திலும் சென்னைப் பல்கலைக்கழகத்திலும் உறுப்பினராயிருந்த இவர், தமிழுக்குச் செய்த மகத்தான சேவை திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்னும் நூலை உலகம் புகழும் வண்ணம் ஆங்கிலத்தில் எழுதியதாகும். தமிழின் முதன்மையை, முதுமையை, வியாபகத்தை உலகம் பிரமிப்படையும் வண்ணம் இவர் 1856 ஆம் ஆண்டில் வெளியிட்டார். இதனை ஆக்குவதற்கு இவர் பல மொழிகளைக் கருத்தூன்றிக் கற்றுப் பெரு முயற்சியெடுத்தார்.

கால்வெல்ட் அடிகளாரின் கல்வித்தரத்தையும் சேவை நலத்தையும் பாராட்டிய அதிகாரிகள் இவருக்கு எல். எச். டி. என்னும் பட்டத்தையும் டி. டி. என்னும் பட்டத்தையும் ஒன்றன்பின் ஒன்றாக வழங்கினர். தாமறிந்த மொழிகளுள்ளே தமிழ் மொழியே சிறந்தது எனக் கருதிய கால்ட்வெல் அடிகளார் தமது தாய்மொழி, கிரேக்கம், லத்தீன், எபிரேயம், தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளுவம், வடமொழி முதலிய பல மொழிகளை நன்கறிந்த பெரும் புலவராவர்.

தமிழறிந்த கால்ட்வெல் அடிகளார் நல்ல தமிழ் நடையில் வேறுபல நூல்களையும், விரிவான கட்டுரைகளையும், துண்டுப் பிரசுரங்களையும் எழுதியுள்ளார். அவை நற்கருணைத் தியானமாலை, தாமரைத்தடாகம் என்னும் நூல்களும்; ஞானஸ்நானம், நற்கருணை என்னும் நீண்ட கட்டுரைகளுமாகும்.

திராவிட மொழிகளில் ஒப்பிலக்கணம் என்னும் ஆங்கில நூலின் இரண்டாம் பதிப்பு 1956 ஆம் ஆண்டில் வெளிவந்தது. அதனைத் தமிழ்ப்படுத்துவதில் புலவர் கா. கோவிந்தன் அவர்களும் புலவர் தா. சிங்காரவேலு அவர்களும் முயற்சி செய்தனர். அவர்தம் முயற்சி 1959 ஆம் ஆண்டில் வள்ளுவர்பண்ணை வெளியீடாக ந. பழனியப்பன் 800 பக்கங்களில் வெளியிட்டுள்ளார். பண்டைக் காலத்திலேயே பைந்தமிழ் உலகத்தை வலம் வந்ததோடு பன்மொழிகளுக்கு வளமூட்டி வளர்த்துமுள்ளது என்பதை அறியும்போது உள்ளம் பூரிக்கின்றது.

## யாழ்ப்பாணத்தில் நூல் நிலையம்

### சென்ற நூற்றாண்டில்

யாழ்ப்பாணத்துப் பெரிய கோட்டுக் காரியதரிசி என்னும் சக்கடத்தாராயிருந்த எவ். சி. கிறீமியர் என்பார் 1842 ஆம் ஆண்டில் ஒரு பொதுசன நூல் நிலையத்தை ஆரம்பித்து வைத்தார். அது சில வருடங்களின் பின் வளர்ச்சி குன்றியது. நீதிமன்றச் சுற்றாடலில் மாத்திரம் சிலகாலம் நிலவிய பின்னர் பொது மக்கள் பயன்படுத்த முடியாத வகையில் இருந்தது.

❋

### இந்த நூற்றாண்டில்

இன்று முனியப்பர் ஆலயத்திற்கு முன்னுள்ள மூன்று மாடிக் கட்டடம் சமீபகாலத்தது. ஆனால் நூலகவியக்கம் ஐம்பது ஆண்டுகளுக்கு முன் ஆரம்பமானது. அதனை ஆரம்பித்தவரும் பெரிய கோட்டுச் சக்கடத்தாராயிருந்த ஒருவர்தான். அவர் அச்சுவேலியைச் சேர்ந்த க. மு. செல்லப்பா அவர்களாவர். அவர் ''யாழ்ப்பாணத்துக்கு ஒரு மத்திய இலவச தமிழ் வாசிகசாலையும் நூற்கழகமும்'' என்னும் வேண்டுகோளினை 11-12-1933 ஆம் நாளில் விடுத்த போது, தம்மை முயற்சி செய்பவரும் பொருள் சேர்ப்பவரும் என்றே அறிமுகஞ் செய்தார். அவர் முதலிற் சேர்த்த தொகை ரூபா 1184 - சதம் 22 என்றும் அறியக் கிடக்கிறது. இதைக் கொண்டு பென்னம் பெரியவர்களை முன்விடுத்து அவர் 9-6-1934 இல் ஒரு பகிரங்கக் கூட்டத்தைக் கூட்டினார்.

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

### பவளம் பழுத்த....

பைக் கூறிய சங்ககாலப் புலவர் ஒருவர், ''கொழுஞ் சூட்டந்திய திருந்து நிலையாரத்து முழவினன்ன உருளி'' என்றார். சில்லிலுள்ள சிலைக்கம்புகள் ஒரேயளவினதாய், ஒரேபடித்தாய், மையத்தையும் வளையத்தையும் அழகாகத் தொட்டு நிற்பன. அவை தொட்டு நிற்கும் நிலையே அருந்திய நிலை. அது கௌவிய நிலை. சிலைக்கம்புகள் ஒன்றுக்கொன்று ஏறுமாறாக அமையுமேயாமாகில் சில்லு உருளமாட்டாது.

சிலைக்கம்பின் அமைப்பில், திருந்து நிலை ஆரத்தில் பண்புகள் சேரவேண்டும். ஒவ்வொரு நம்பியும் ஒவ்வொரு நங்கையும், ஒவ்வொரு தம்பியும் ஒவ்வொரு தங்கையும் பண்பட்ட பழக்கங்கள் வழக்கங்களின் கொள்கலமாகி உருவாதல் வேண்டும். பண்பு குறைந்தால் நாகரிகமும் இல்லை, தர்மமும் இல்லை. தர்மீக அரசும் இல்லை. நமக்குத் தேவை நாகரிகம். நம்பி நங்கையர் நன்னடை நடக்கப் பழக்குதல் வேந்தற்குக் கடனே என்று எப்பவோ ஒரு நாள் பண்பட்ட அன்னை ஒருத்தி வாய்ச் சொல்லாகப் புலவர் ஒருவர் பாடியுள்ளார்.

''ஈன்று புறந்தருதல் என்றலைக் கடனே
சான்றோ னாக்குதல் தந்தைக்குக் கடனே
நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே.''

★ அறிவு வளர்ச்சியோடு அன்பும் வளரவேண்டும் ★

## வஜனுமிர்தம்

சுவாமி கெங்காதரானந்தா
சிவயோக சமாஜம் - திருக்கோணமலை

1. தாய் தந்தையர்களின் அந்தரங்க எண்ணங்களின் உருவமாகத்தான் குழந்தைகள் பிறக்கின்றன.
2. தாய் தந்தையர்களின் அடிமனதில் பதிந்திருக்கும் எண்ணங்களுக்குத் தக்கபடி, பிறக்கும் குழந்தைகளின் அடிப்படைச் சுபாவமும் அமைந்திருக்கும்.
3. தர்ம சிந்தனைகள் அடிமனத்தில் பதியாதவர்களுக்கு நன்மக்கள் பிறப்பதில்லை.
4. தர்மத்தை உபாசிக்கின்றவர்களுக்குத் தர்மதேவதை புத்திரனாகப் பிறக்கிறது.
5. நல்லறமிக்க இல்லறத்திலிருந்து ஒழுக்கமுடைய மக்கள் பிறக்கின்றனர்.
6. நல்லறமில்லாத இல்லறமே ஒழுக்கங்கெட்ட பிரஜைகளுக்குக் காரணம்.

## விருந்துபசாரம்

தமிழ் நாகரிகத்தில் தலைசிறந்த பண்பாடு அவர்தம் விருந்துபசாரம். தமிழர் விருந்தைப்பற்றித் திருவள்ளுவர் அமைவாகக் கூறியுள்ளார். இன்சொல்லால் உபசரித்து ஈரநெஞ்சுடன் இனிய விருந்தளித்தவர் தமிழர். கந்தபுராண கலாசாரத்தில் ஊறிய யாழ்ப்பாணத்தாரின் விருந்து பெரிய வேள்வி.

முன்னர் சின்னமனத்தான் என்பான் செய்த விருந்தின் சுவையை விண்ணவர்கள் அறிந்திருந்தால் வேலைவினை கெட்டுப் பாற்கடலைக் கடைந்து அமுதத்திற்காகப் பாடுபட்டிருக்கமாட்டார்கள் என்றொரு புலவர் பாடியுள்ளார்.

இன்னதம் விண்டு விண்ணோர்க் கீந்த செயலிதுவாம்
மன்னவனும் தொக்க வருதினியு — நன்னருண
அன்னமளித் திந்நாளிவ் வாதரவு தந்துநின்ற
சின்ன மனத்தான் செயல்.

சின்ன மனத்தான் செயும்விருந்திற் சாற்றுரிசி
அன்னதனை விண்ணோர் அறிந்திருந்தால்— முன்னலைவாய்
வெற்பதனைக் காவியுய்த்து வேலைகடந் தேயுலைதல்
அற்பமெனத் தள்ளுவரே யாம்.

## சின்னக் காளமேகம்

இம்மென்னும் முன்னே பாடல்கள் பாடிய காளமேகம், பெருங்காளமேகம். ஈழத்துக் காளமேகம் அல்லது சின்னக்காளமேகம் என்னும் புலவர் ஒருவர் யாழ்ப்பாணத்து ஆவரங்காலில் வாழ்ந்தவர். இராமநாத முதலியார் வழியில் வந்த சுப்பிரமணியம் என்பார் வட்டுக்கோட்டையில் செமினறியில் பெரும் படிப்புப் படித்த காலத்தில் பாற்றசன் என்னும் பெயர் புனைந்திருந்தவர். கல்விப் பெருமையுள்ள இவர் கவிபாடும் தனியாற்றல் வாய்ந்தவர். இவரின் மைந்தர்களுள் நல்லதம்பி என வழங்கிய நமச்சிவாயப் புலவர். இவர் காலத்தில் பெரும் புலவராயிருந்ததோடு சிவசம்புப் புலவர், ஆறுமுகநாவலர் மதிக்க வாழ்ந்தவர். நாவலர் எழுதிய கண்டனக் கட்டுரைகளுக்குச் சார்பாக வெற்றிவேலாயுதம் என்னும் நூலை எழுதி வெளியிட்டவர். கண்டனப் பாக்கள் எடுத்த எடுப்பிலே பாடிக் குவித்த இவர் பெருமையை வியந்து இவரைக் காளமேகத்தோடு சேர்த்துப் பாடியவர் சுபவாக்கியம்பிள்ளை என்னும் புலவராவர்.

மெச்சு கவிக்காள மேகமோ வீணருளம்
அச்சமுறச் செய்யும் அரியேறோ — மெச்சொன்னோ
ராயப் பெருவலிகா லாவரங்கால் வாழ்நமச்சி
வாயப் புலவணிந்த மண்.




**மில்க்வைற் உற்பத்திப் பொருட்களுக்கு**
**நீங்கள் கொடுக்கும் ஆதரவு**
**நாட்டின் நற்பணிகளுக்கே உதவுகிறது.**

## *Sunlight Improves Eyesight*

— SWAMI SIVANANDA —

Sun is the presiding god for the eyes. He bestows health, vigour, and vitality. Sit in the sun in the early morning and evening with your eyes closed. Slowly move your head from side to side. Allow the sun to shine directly on your closed eyelids, for ten minutes.

Now come to the shade. Cover the eyes with palms and hands for five minutes. Avoid any pressure on the eye-balls.

Your eyesight will improve. There will be no necessity for wearing glasses. Practise this for one or two weeks. You can continue this for a month also.

**ஆன்மீக வாசிப்பு:** இராமாயணம், பகவத்கீதை, வாழ்வில் மாணவர் சித்தி (சிவானந்தர்) முதலியன போன்ற ஊக்கமளிக்கும் ஆன்மிக நூல்களை ஒழுங்காகப் படிக்குக.

— சுவாமி சிவானந்தர்

யாழ்ப்பாணம் சாந்தி அச்சகத்தில் அச்சிட்டவர் திரு. தி. நாகரத்தினம். யாழ்ப்பாணம் மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகத்தின் சார்பாக வெளியிட்டவர் "சிவநெறிப்புரவலர்" க. கனகராசா ஜே. பி. அவர்கள்
கௌரவ ஆசிரியர்: திரு. க. சி. குலரத்தினம். 1-3-82.